செ. வெ. எண் :512 2.7.08

## பொதுப்பணித்துறை 150 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பூங்கா

பொதுப்பணித்துறை 1858 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இவ்வாண்டு 2008ல் 150ம் ஆண்டு நிறைவு பெறவுள்ளது. இப்பொன்னான ஆண்டில் இந்நினைவினை கொண்டாடும் வண்ணம் அடையாறு ஆற்றின் கரையில் கோட்டூர்புரத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி ஒரு சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்த அடிப்படையில் இப்பூங்கா அமைக்கப்படுகிறது.

இப்பூங்கா அமையவிருக்கும் இடத்தில் 97 குடும்பங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆக்கிரமிப்பாளர்கள் வசிப்பதற்கு மாற்று வீடு அளித்து அரசு நிலம் மீட்கப்பட்டது. இந்த பகுதியில் சுமார் 5 ஏக்கர் நிலப்பகுதி முழுவதுமாக சீர் செய்யப்பட்டு மரங்கள் வளர்க்கும் பூங்காவாக்க திட்டமிடப்பட்டது. மேலும் இந்த பூங்காவில் பல அரிய வகை மரங்கள் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பூங்கா தற்பொழுது ரூ.50 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பூங்கா அமைக்கும் திட்டத்தில் கீழ்கண்ட பணிகள் உள்ளன.

1) பூங்காவினைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைத்தல்.

2) அடையாற்றின் தெற்கு கரையில் கருங்கற்களினால் பாதுகாப்பு அமைத்தல்.

3) பூங்காவின் உற்புறம் செல்லும் மழைநீர் கால்வாயினை நீட்டித்து சீரமைத்தல்.

4) பூங்காவின் உபயோகத்திற்காக கை பம்புகள் அமைத்தல்.

5) பூங்காவின் உள்பகுதியில் மண் இட்டு சமன் செய்து நடைபாதைகள் அமைத்தல்.

6) பூங்காவினுள் இரு இடங்களில் நடைபாலம் அமைத்தல்.

7) பூங்காவினுள் மருத்துவ குணம் நிறைந்த மகிழம் பூ, மருது, புன்னை, மந்தாரை, மலை வேம்பு போன்ற மரக்கன்றுகள் நட்டு பாதுகாத்தல்.

இப்பூங்கா, அமைவதால் ஆற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்டு, மரங்கள் நடப்பட்டு, சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும், இப்பகுதியில் உள்ள மக்கள் நடைபயிலவும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. மேலும் இப்பூங்காவை மேம்படுத்தும் பணியில் அரசு சாரா அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

இப்பூங்கா அமைக்கும் பணியினை 02.07.2008 அன்று மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை திரு. மா. சுப்ரமணியன் அவர்கள் முன்னிலையில் மரக்கன்று நட்டு துவக்க உள்ளார்கள்.

இவ்விழாவில் பொதுப்பணித்துறை பொறியாளர்கள், இப்பகுதியின் மாமன்ற உறுப்பினர் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மேலும் இதுபோன்று, தெற்கு கேசவ பெருமாள்புரம், பக்ஸ் சாலை போன்ற பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட இடங்களில் நீர்வள ஆதார துறை மூலம் அடையாற்றினை அகலப்படுத்தி மரங்கள் நட்டு, அரசு நிலங்களை பாதுகாத்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9